# KAYALPATTINAM MUNICIPALITY FORM 3
## Minutes of the Meeting held on 11.01.2019

| Date of Council meeti ng | Deceis on Numb er | Subject of the Agenda | Resolution |
|---|---|---|---|
| 11.01.2019 | 228 | **பொருள் – 1**<br>விருதுநகர் நகராட்சி நூற்றாண்டு விழா தொகுப்பு – ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்ட அலகின் கீழ் 10 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட 3 எண்ணம் மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணிக்கு அரசாணை எண் 56, நாள் 14.05.2014 ன் படி நிதியினை அனுமதித்து இதில் முதல் தவணையாக ரூ.250.00 இலட்சம் நிதி விடுவிப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் இரண்டு தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு பயன்படுத்த தயார் நிலையில் உள்ளது. மேற்கண்ட இரண்டு தண்ணீர் தொட்டிகள் முழுமையான பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டியுள்ளதால் நூற்றாண்டு விழா தொகுப்பில் IGFF திட்டத்தில் பழைய பேருந்து நிலையத்தில் காத்திருப்போர் கூடம் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்திடம் அமைக்கும் பணி கைவிடப்பட்டதால் , நீர்தேக்கத் தொட்டி கட்டும் பணிகள் முழுமையாக முடிக்க தேவைப்படும் கூடுதல் நிதியான ரூ.70.60 இலட்சத்தில் IGFF திட்டத்தில் பழைய பேருந்து நிலையத்தில் காத்திருப்போர் கூடம் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்திடம் அமைக்கும் பணிக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் ரூ.35.00 இலட்சம் நிதிமாற்றம் செய்யப்பட்டது போக மீதமுள்ள ரூ.65.00 இலட்சம் நிதியினை மேற்கண்ட நீர்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கும் பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும், கூடுதலாக தேவைப்படும் நிதி 5.60 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். / 2018 / இ1. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 229 | **பொருள் -2**<br>விருதுநகர் நகராட்சி குழாய் திருப்புநர்களால் இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை சென்னை அவர்களை இரண்டாவது பிரதிவாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு எண்.20630 மற்றும் 2020-க்கு வழக்கு கட்டணம் ரூ.6000/- ( ரூபாய் ஆராயிரம் மட்டும் ) திரு.S.தயாளன், அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை, மதுரை அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.<br><br>கோப்பு எண்.8963 / 2018 / சி1. | அனுமதிக்கப்பட்டது |
| | 230 | **பொருள்-3**<br>இந்நகராட்சியின் பொது சுகாதார வாகன எண்.TN 67 BD 8056-க்கு ஆண்டு பராமாரிப்பு பழுது நீக்கும் பணியினை மேற்கொள்ள 18.12.2018-ம் நாள் மன்ற முன் அனுமதி பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கீழ்கண்ட விபரப்படி விலைப்புள்ளிகளைப் பெறப்பட்டுள்ளது. | அனுமதிக்கப்பட்டது |

| வ.எண். | விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | Ravimohan Auto service, Virudhunagar | 34,000/- |
| 2. | R.A. 267, srivilliputhur Block Agro Engg.and service co.op. centre Ltd. | 32,300/- |
| 3. | Verti Automobiles Madurai | 35,100/- |

மேற்கண்டுள்ள விபரப்படி வரிசை எண்: 2-ல் உள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்கவும் மற்றும் பொது சுகாதார பணியினை கருத்திற் கொண்டு வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்

கோப்பு எண்.11487/2018/எச்1

231

**பொருள்-4**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண்.TN67 BD8060-க்கு ஆண்டு பராமரிப்பு பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ள விலைப் புள்ளிகளைப் பெற்று மேல் நடவடிக்கை எடுக்க 18.12.2018-ஆம் நாள் மன்ற முன் அனுமதி பெறப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கீழ்கண்டுள்ள விபரப்படி விலைப்புள்ளிகளைப் பெறப்பட்டுள்ளது.

| **வ.எண்.** | **விபரம்** | **தொகை** |
|---|---|---|
| 1. | Verti Automobiles Madurai | 44,900/- |
| 2. | Ravimohan Auto service, Virudhunagar | 36,350/- |
| 3. | R.A. 267, srivilliputhur Block Agro Engg.and service co.op. centre Ltd. | 33,900/- |

மேற்கண்டுள்ள விபரப்படி வரிசை எண் 3-ல் கண்டுள்ள நிறுவனத்திற்கு குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பொதுமக்களின் நலன் கருதியும் பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதியும் வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்

கோப்பு எண்.11485/2018/எச்1

அனுமதிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>232</td>
<td>
<u>பொருள்-5</u><br>
இந்நகராட்சியின் வாகனம் எண்.TN67 B8 8068-ற்கு ஆண்டு பராமரிப்பு பழுது நீக்கும் பணியினை மேற்கொள்ள 18.12.2018-ஆம் நாள் மன்ற முன் அனுமதி பெறப்பட்டுள்தைத் தொடர்ந்து கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகளைப் பெறப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>விபரம்</th><th>தொகை</th></tr>
<tr><td>1.</td><td>R.A. 267, srivilliputhur Block Agro Engg.and service co.op. centre Ltd.</td><td>31,900/-</td></tr>
<tr><td>2.</td><td>Ravimohan Auto service, Virudhunagar</td><td>34,700/-</td></tr>
<tr><td>3.</td><td>Verti Automobiles Madurai</td><td>35,900/-</td></tr>
</table>
மேற்கண்டுள்ள விபரப்படி வரிசை எண் 1-ல் உள்ள குறைந்த விலைப்புள்ளியினை ஏற்றும் மற்றும் பொதுமக்களின் நலன் கருதியும் மற்றும் பொது சுகாதாரப்பணியின் அவசர அவசிய தேவையை கருதியும் வேலை உத்திரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.11486/2018/எச்1
</td>
<td>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 233 | **பொருள்-6**<br>விருதுநகர் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் திரு.குருசுப்பிரமணியன், 22.07.1989–ஆம் ஆண்டு முதல் ஓட்டுநராகவும் மற்றும் திரு.தர்மர் 16.04.1991–ஆம் ஆண்டு முதல் ஓட்டுநராகவும் பணிபுரிந்து வருகிறார்கள். மேற்காணும் இரண்டு ஓட்டுநர்களின் பணிப்பதிவேட்டின் படி 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்த வகைக்கு அரசாணை நிலை எண்.238, நாள்.01.10.1997ன் படி வெகுமதி வழங்க கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள். மேற்கண்டுள்ள இரண்டு ஓட்டுநர்களுக்கும் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்த வகைக்கு அரசாணை நிலை எண்.238, நாள்.01.10.1997ன் படி வெகுமதி வழங்குவது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று மேற்காணும் அரசாணையில் அறிவுறுத்தியவாறு சென்னையிலுள்ள எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநர் அவர்கள் மூலமாக தங்கப்பதக்கம் தயாரிக்கவும், அதற்கான செலவினத்தொகையை வருவாய் நிதியிலிருந்து (பொதுநிதி) செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மேற்காணும் செலவுத்தொகையினை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.68 / 2019 / எச்.1 | அனுமதிக்கப்பட்டது |
| | 234 | **பொருள்-7**<br>இந்நகராட்சியில் 2013-2014ம் ஆண்டு திட்டத்தின் கீழ் ஆனைக்குட்டம் குடிநீர் திட்ட பிரதான குழாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்ததாரர் திருச்சி கன்ஸ்ட்ரச்சன்ஸ், திருச்சி தான் செலுத்தியுள்ள முன்வைப்புத்தொகை கேட்டு விண்ணப்பித்துள்ளதின் அடிப்படையில் வைப்புத்தொகையினை வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 6679 / 2013 / இ2. | அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>235</td><td>

**<u>பொருள்-8</u>**

விருதுநகர் நகராட்சி நாராயணமடம் பெண்கள் கழிப்பிடம் அருகில் 2 மெட்ரிக்டன் நுண் உயிர் உரம் தயாரிக்கும் களம் அமைக்கும் பணிக்கு இடையூறாக உள்ள மரங்களை வேருடன் அகற்றி அப்புறப்படுத்துவதற்கு அரசின் மதிப்பாக ரூ.1050/– நிர்ணயம் செய்யப்பட்டு, 27.12.2018 அன்று ஏலம் கோரப்பட்டது. அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். வரப்பெற்ற ஏலதாரர்களின் ஏலத்தொகையினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<table>
<tr><td>வ. எண்</td><td>ஏலதாரரின் பெயர்</td><td>ஏலத்தொகை</td></tr>
<tr><td>1.</td><td>திருமதி.பி.சக்கரையம்மாள், ஏலதாரர் விருதுநகர்</td><td>ரூ. 1250/–</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஏ.ஆர்.ஆர்.கோவிந்தராஜ், ஏலதாரர் விருதுநகர்</td><td>ரூ. 1300/–</td></tr>
</table>

மேற்கண்ட பணிக்கு உயர்ந்தபட்ச ஏலத்தொகையாக ரூ.1300/– திரு.ஏ.ஆர்.ஆர்.கோவிந்தராஜ் ஏலதாரர் கோரியுள்ளார். அன்னாரது உயர்ந்த பட்ச ஏலத்தொகையினை மன்றம் ஏற்கலாம்.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.இ3/12146/15

</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>236</td><td>

**<u>பொருள்-9</u>**

விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான 9 வருடம் முடிவு பெற்ற கடைகளுக்கு வாடகை மறு நிர்ணயம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து 23 கடைக்காரர்கள் தனித்தனியாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் ஒரு ஆண்டு குத்தகை இனம் வழக்கும் மொத்தம் 24 வழக்குகளில் நகராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு.முத்துகீதையன் என்பவருக்கு வழக்கறிஞர் கட்டணம் அவரது பில்லின்படி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

<table>
<tr><td>வ.எண்.</td><td>பெயர் மற்றும் வழக்கு எண் விபரம்</td><td>வழக்கறிஞர் கட்டணம் விபரம்</td></tr>
<tr><td>1.</td><td>முகமது சிக்கந்தர்அராபத்<br>W.P ( MD )23.990 of 2018</td><td>7500+2500<br>Total = ரூ.10,000/-</td></tr>
<tr><td>2.</td><td>N.பெரியசாமி<br>W.P ( MD )23991of 2018</td><td>ரூ.10,000/</td></tr>
<tr><td>3.</td><td>தமிமுன் அன்பிரி</td><td>ரூ.10,000/</td></tr>
</table>

</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | W.P ( MD )23992 of 2018 | | | |
| | | 4. | செய்யது அபுதாஹிர் அலி<br>W.P ( MD )23993 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 5. | ஹாரூன்ரசித்<br>W.P ( MD )23994 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 6. | M.மகாலிங்கம்<br>W.P ( MD )23995 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 7. | சலீம்பாதுஷா<br>W.P ( MD )23996 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 8. | M.ஜாஹீர்உசேன்<br>W.P ( MD )23997 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 9. | R.யோகன்<br>W.P ( MD )23998 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 10. | கோபால கிருஷ்ணன்<br>W.P ( MD )23999 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 11. | முகமதுயூசுப்<br>W.P ( MD )24002 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 12. | முனிராஜ்பாண்டியன்<br>W.P ( MD )24003 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 13. | ஜெயபால் 7-வழக்கு<br>W.P ( MD )24004 of 2018<br>24010 வரை | ரூ.10,000/ | | |
| | | 14. | குமரவேல்<br>W.P ( MD )24380 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 15. | A.N.அருண்<br>W.P ( MD )24381 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 16. | P.SS.கணபதி<br>W.P ( MD )24382of 2018 | ரூ.10,000/ | | |
| | | 17. | எடிசன்ராஜா<br>W.P ( MD )24383 of 2018 | ரூ.10,000/ | | |
| | | 18. | S.P.நாக ராஜன்<br>W.P ( MD )165 of 2012 ( ஆண்டு குத்தகை இனம் ) | ரூ.10,000/ | | |

| | | | |
|---|---|---|---|
| | | ஒரு வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/- வீதம் 24 வழக்குகளில் ஆஜரானதற்கு கட்டணம் ரூ.10,000 * 24 - 24 = 2,40,000/- ( இரண்டு லட்சத்து நாற்பது ஆயிரம் மட்டும் ) வழங்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மேற்படி வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக ஆஜரான கட்டணம் ரூ.2,40,000/-த்தை வழக்கறிஞருக்கு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியுடன் ரூ.1,00,00,00/- ( ஒரு லட்சம் மட்டும் ) முன்பணமாக வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | 237 | **<u>பொருள்-10</u>**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான 34 கடைகளுக்கு 10.01.2019-ந்தேதி நடடைபெற்ற போது ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் அரசு மதிப்பீட்டை விட கூடுதல் ஏலக்கேள்வி கீழ்க்கண்ட விபரப்படி வரப்பட்டுள்ளது.<br><br>**<u>மீன்மார்க்கட் கடைகள்:</u>**<br><br>1.பெயர்: S.அன்பு கடைஎண்.5<br>51/2, நாச்சி தெரு, ரூ.3,000/-<br>விருதுநகர்<br><br>மேற்படி விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்<br><br><u>அலுவலகக்குறிப்பு</u><br><br>மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மீன்மார்க்கட் கடை எண்.5-யை ஏலதாரரிடம் ஒப்படைக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.7825/அ1/2015. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 238 | **<u>பொருள்-11</u>**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான ரயில்வே பீடர் சாலை S.V. பூங்காவில் அமைந்துள்ள கட்டண கழிப்பறை வசூல் பணி துறை வாரியாக நடைபெற்று வந்தது. இதில் வசூல் மாதத்திற்கு ரூ.3,000/-வீதம் ஆண்டிற்கு ரூ.36,000/- வருவாய் குறைவாகவே வசூல் ஆகிவந்தது. மேலும் இங்கு வசூல் பணியில் ஈடுபட்டு வந்த அலுவலக பணியாளர்களுக்கு மாதவூதியம் 22 ஆயிரம் வீதம் ஆண்டிற்கு ரூ.2,64,000/- செலவினமாவதால் இந்த குத்தகை இனத்தை பொது ஏலம் மூலம் முடிவு செய்ய 24.10.2018,15.11.2018, மற்றும் 12.12.2018 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி ஏலக்கேள்வியை விட தற்பொழுது 4-வது முறையாக 28.12.2018-ந்தேதியில் நடைபெற்ற பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி ஏலக்கேள்வி திரு.V.மகேந்திரன் என்பவர் ரூ.80,600-க்கு கேட்டுள்ளதால் இவருக்கு மேற்படி S.V.பூங்காவில் அமைந்துள்ள கட்டணக் கழிப்பறை குத்தகை உரிமையை வழங்கலாம். மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்<br><br>**<u>அலுவலக்குறிப்பு</u>**<br><br>S.V.பூங்கா கட்டணக்கழிப்பறை குத்தகை உரிமையை 01.01.2019 முதல் திரு.V.மகேந்திரன், 84, காந்திபுரம் தெரு, விருதுநகர் என்பவருக்கு வழங்க மன்றத்தில் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| | 239 | **<u>பொருள்-12</u>**<br><br>இந்நகராட்சிக்கு சொந்தமான 35 கடைகளுக்கு 28.12.2018-ந்தேதியில் நடைபெற்ற பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் உயர்த்தப்பட்ட வாடகை தொகையை விட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி அரசு மதிப்பீட்டை விட கூடுதலாக 1 கடைக்கு வரப்பட்டுள்ளது. அதன் விபரம்<br><br>மீன்மார்க்கட் கடை எண்.4.      ஏலக்கேள்வி<br><br>கோப்பம்மாள்<br>13/94, சிவந்திபுரம்,      ரூ.3,000/-<br>கருப்பசாமி கோவில் தெரு,<br>விருதுநகர்.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் வரப்பட்ட உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மீன்மார்க்கட் கடை எண்.4-யை 01.01.2019 முதல் கடை உரிமையை வழங்க மன்றத்தில் அனுமதி வழங்கலாம். | அனுமதிக்கப்பட்டது |